

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் மனிதநேயம் 44, மனதில் துணிவு புயலாகும்!! மாற்றம் முதல்வர் செயலாகும்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் வடக்கு பகுதியில் மாபெரும் நல உதவி வழங்கும் நிகழ்ச்சி நேற்று (6.04.2025) பி.கே.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பேராசிரியர் தீபக் நாதன் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு மளிகை பொருட்கள், அரிசி மற்றும் நிதி உதவிகளை 400 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 46வது நாள்!

## அம்பத்தூர் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!





சென்னை, ஏப். 7-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 46 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (6.4.2025) அம்பத்தூர் தெற்கு பகுதி, இடம்: 1) வட்டம் 93 பிள்ளையார் கோயில் அண்ணா சாலை சந்திப்பு பாடி குப்பம். 2) வட்டம் 90 அம்பத்தூர் நகர் பாடி குப்பம் ரோடு ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம். டி.ஆர் நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




பல்லாவரம் தொகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி 22 வது வார்டில் முதலவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இறகு பந்து போட்டி வட்ட ச் செயலாளர் எம். நாகராஜ் தலைமையில் பகுதி பொருளாளர் டி. கார்த்திக் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ, கருணாநிதி எம்,எல்,ஏ கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு தளபதி கோப்பையும் ரொக்க பரிசும் வழங்கினார். உடன் துணை மேயர் கோ, காமராஜ், மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழக செயலாளர் ஏ. கே. கருணாகரன், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி தண்ணீர் பந்தலை (4.4.2025) அன்று எஸ்.எஸ்.புரம் பி பிளாக் மெயின் தெரு பிரிக்ளின் சாலையில் திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.மனோஜ்சேகரன் தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா க.அ. இராசப்பா
### ஏப்ரல் 7 (1993)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணியில் குமரி மாவட்டத் தலைவராகவும், பின்னர் மாவட்ட கழகத் துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக பாளையங்கோட்டை சிறையில் ஒரு வருடம் இருந்தவர்.

1986ல் நடைபெற்ற சட்ட எரிப்பு போராட்டத்தின்போது நெஞ்சு வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் "செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின் இந்த தேகம் இருந்தென்ன லாபம்" என சொல்லி மருத்துவமனையிலிருந்து சிறைபுகுந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் – பேராசிரியர் தீபக் வழங்கினார்!

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில் 400 மாற்றுத்திறனாளிகளுக்கு நல உதவிகள்!

### மேயர் பிரியா -ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ - டி.எஸ்.பி.இராஜகோபால் – எம்.டி.ஆர்.நாகராஜ் பங்கேற்பு! பி.கே.மூர்த்தி தலைமை!

சென்னை, ஏப். 7 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 44, மனதில் துணிவு புயலாகும்!! மாற்றம் முதல்வர் செயலாகும்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் வடக்கு பகுதியில் மாபெரும் நலத்திட்டம் நேற்று (6.04.2025) அம்பத்தூர், மகாலட்சுமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் மண்டலக்குழுத்தலைவர் பி.கே. மூர்த்தி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டாக்டர் ஜி.சாந்தகுமார் எம்.சி, து. ஆயிரம், எல்.பி.எப். மோகன், வி.ரமேஷ் (எ) நிலகண்டன் எம்.சி, டாக்டர்.ஏ.பி. பூர்ணிமா எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன்.

பகுதி நிர்வாகிகள்: அ.திராவிடசெல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமிரங்கநாமி, மேனாம்பேடு இ.ராமு, மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா, செல்லதுரை, கு. சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வெ.ராதாகிருஷ்ணன், மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, சி.சீனிவாசன், எம்.இ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், இரா.டீக்கா. எம். குணசேகரன், ப.மதி, பொன். நவராஜ்ரவி, எம்.ஹரிகிருஷ்ணன், அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: கே.பொற்கொடி எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி எஸ்.உமா எம்.சி வரவேற்றனர்.


இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பேராசிரியர் தீபக் நாதன் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு மளிகை பொருட்கள், அரிசி மற்றும் நிதி உதவிகளை 400 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

சன்.பி.முனியாண்டி எம். குணசேகரன் ப.மதி பொன். நவராஜ்ரவி எம்.ஹரிகிருஷ்ணன் ஆ.இரா.அருண் மா.குப்புசாமி க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன் கோ. சேகர்லால் பி.வி.மூர்த்தி கே.செல்வம் கோ.முத்து குமாரசாமி கோ.ராகோ. முத்துகுமாரசாமி கோ. ராஜ்குமார் ந.குமரவடிவேல் ச.கோதண்டன் கோ.இன்பசேகரன் இ. நடராஜன் ஆர்.விமலன் ஜெ.ஐயப்பன் எஸ்.பரமசிவம் பொன்சேட்டு ஏ.கே.டி.பாஸ்கர் ஆர்.ஜெயராமன் சோ.மதியழகன் எஸ்.எஸ்.சவரிமுத்து பா.மாறன் டி.சுரேஷ்பாபு எஸ். கே. சதீஷ்குமார் எஸ்.எம்.முருகானந்தம் ஏ.வி.தட்சிணாமூர்த்தி ஆகியோர் சிறப்பித்தனர்.

வே.ரவீந்திரன் பு. வீரா என்ற வீரராகவன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.பா. செபாஸ்டின்
### ஏப்ரல் 7 (2010)



1955ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம், 78வது வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து முப்பது ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

டெல்லியில் இலங்கை முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு முரசொலி மாறன் அவர்களுடன் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இவர் உள்ளிட்ட ஐவர்மீது அ.தி.மு.க. அரசினால் போடப்பட்ட பொய் வழக்கில், நீதிமன்றத்தால் கலைஞர் அவர்களுடன் விடுதலை செய்யப்பட்டவர்.

1955ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தபோது, அவரிடம் தேதியுடன் பெற்ற கையெழுத்தை ஐம்பதாண்டுகள் பாதுகாத்து வைத்து, 2005ஆம் ஆண்டு, அவரது கையெழுத்தை காட்டியபோது, கலைஞர் அவர்கள் "உன்னைப் போல நீ இருக்காதே!'' என்று எழுதி கையொப்பமிட்டு வாழ்த்தினார்.

இந்தி ஆணை நகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**